[1972 ஆகஸ்ட் 24

Wall Posters bearing the slogan " Tamil Nadu is only for Tamilians ".

* 236 Q.—Thiru P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that wall posters bearing the slogan " Tamil Nadu is only for Tamilians " were found in Tiruchirappalli town during March 1972; and

(b) if so, the details thereof?

"தமிழ் நாடு தமிழருக்கே" என்ற சுவரொட்டிகள்

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) திருச்சி நகரில் 1972-ஆம் ஆண்டு மார்ச் மாதம் "தமிழ் நாடு தமிழருக்கே" என அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் காணப் பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : (அ) கையால் எழுதப்பட்ட சுவரொட்டிகள் (அச்சடிக்கப்பட்டவையல்ல) திருச்சிராப்பள்ளி நகரில் 2—3—1972 அன்று காணப்பட்டன.

(இ) இ.பி.கோ. 124 (எ) பிரிவின் கீழ் காவலர் வழக்கு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர். அது புலனுய்வில் உள்ளது.

திரு. பி. திருஞானசம்பந்தம் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட சுவரொட்டிகள், இந்த சர்க்கார்மீது கெட்ட எண்ணம் கொண்ட ஒரு அரசியல் கட்சியால் ஒட்டப்படுகின்றனவா என்பதை இந்த அரசு ஆராயுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : அப்படித்தான் யூகிக்க வேண்டியிருக்கிறது. ஏனென்ருல் சுவரொட்டியிலிருந்த வாசகங்கள் அதுபோல் தான் அமைந்துள்ளன.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அந்த சுவரொட்டிகளை ஒட்டிய வர்கள் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டதா ? அப்படி ஒட்டிய சுவ ரொட்டி போன்று வேறு ஊர்களிலும் ஒட்டியிருக்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவை அச்சடித்த சுவரொட்டியாக இருந்தால் தான், அச்சடித்த அச்சகத்தைக் கண்டு பிடித்து அதன் வாயிலாக யார் அச்சடித்தார்கள் என்ற விவரம் அறிந்து, அவர்களைக் கைது செய்ய வசதி இருக்கும். ஆனால் இது வெறும் கையால் எழுதப்பட்டிருப்பதால், இது போன்ற சுவரொட்டிகளை ஒட்டியவர்கள் யார் என்று கண்டுபிடிப்பது கடினமாக இருக்கிறது. திருச்சி, மதுரை, சென்னை போன்ற இடங்களில் அப்படிப் பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. ஆயிரக்கணக்கில், நூற்றுக் கணக்கில் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒன்றிரண்டு கையால் எழுதப்பட்டு ஆங்காங்கே ஒட்டியிருக்கிறார்கள்.

Pay and Accounts Office, Madras

* 237 *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of Thiru V. ISVARMURTI) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Pay and Accounts Office, Madras is to be bifurcated; and

(*b*) if so, the details thereof?

சம்பள—கணக்கு அலுவலகம்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலுள்ள சம்பள—கணக்கு அலுவலகம் இரண்டாகப் பிரிக்கப்படவிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதுகுறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) தற்போதுள்ள சம்பளக் கணக்கு அலுவலகத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்புக்கு 1972–73-ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பாகத் திட்டமாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்குவது குறித்த ஆணைகள் இந்த ஆண்டில் பிறப்பிக்கப்படும். தற்போது செயல்பட்டு வரும் சம்பளக் கணக்கு அலுவலகத்தில் பணிச் சுமை அதிகமாக உள்ளது. ஆகவே இதை அலுவல் அடிப்படையில் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. புதிய சம்பளக் கணக்கு அலுவலகம் தொடர்பான தொடக்கப் பணிகள் அனைத்தையும் கவனிக்க இயக்குநர் அலுவலகத்தில் சிறப்பு அலுவலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.